ஒப்பிலக்கியம்
18MTA44C - U - III

## இலக்கியமும் கவின்கலைகளும் :-

இலக்கியம் போலவே சிற்பம், ஓவியம், இசை, கூத்து, கட்டடக் கலை முதலான கவின்கலைகளும் மனித உணர்ச்சிகளின் வெளிப்பாடாக அமைகின்றன. மேரி கெய்தர் என்னும் ஒப்பிலக்கிய அறிஞர், "இலக்கியத்தையும் கவின்கலைகளையும் ஒப்பிடுவோர்க்கு வளமான எதிர்காலம் காத்திருக்கிறது" என்று குறிப்பிடுகிறார். இலக்கியத்தை கவின் கலைகளோடு ஒப்பிட மூன்று அணுகுமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். அவை வருமாறு:

1. இலக்கியம், கவின்கலைகள் ஆகிய இரண்டின் உருவம், உள்ளடக்கம் ஆகிய அடிப்படைகளில் காணப்படும் உறவுகளையும் ஒப்புமைகளையும் ஆராய்தல்.

2. கவின்கலைகளிலிருந்து இலக்கியத்திற்கும், இலக்கியத்திலிருந்து கவின்கலைகளுக்கும் ஏற்படும் பரஸ்பர தாக்கங்களை ஆராய்தல்.

3. இலக்கியத்திலும் கவின்கலைகளிலும் பல்வேறு கலைக்கூறுகளின் ஒருங்கிணைப்பினால் ஏற்படக்கூடிய முழுமையை ஆராய்தல்.

முதல் அணுகுமுறை இலக்கியம், கவின்கலைகள் ஆகியவற்றின் அமைப்பு பற்றிய சிந்தனைக்கு வித்தாகிறது. இரண்டாவது அணுகுமுறை இலக்கியம், கவின்கலைகளின் உருவாக்கம் பற்றிய ஆய்வுக்கு இட்டுச்செல்கிறது. மூன்றாவது அணுகுமுறை இலக்கியம், கவின்கலைகள் ஆகியவை வாசகன் அல்லது பார்வையாளரின் மனத்தில் ஏற்படுத்தும் விளைவுகளைப் பற்றிய ஆய்வுக்கு இட்டுச் செல்கிறது.

இலக்கியமும் சிற்பமும் :-

ஒரு இலக்கியப் படைப்பு தெளிவான அமைப்பில் உருவாகும்போது, அது உணர்த்த விரும்பிய சில உணர்ச்சி அலைகளை வாசகன் மனத்தில் எழுப்புகிறது. ஒரு நல்ல சிற்பம் அதனுடைய உறுப்புக்கள் பலவும் குறித்த விகிதங்களில் அமைந்து உருவாகும் போது காண்பவர் கண்ணுக்கு விருந்தாக அமைகிறது.

சிறுப சிறுபாணாற்றுப்படை :-

சங்க இலக்கியத்தில் காணப்படும் சிறுபாணாற்றுப்படையின் அமைப்பு இலக்கியம், சிற்பம் ஆகியவற்றின் உருவ உள்ளடக்க பற்றிய கருத்துக்களுக்குச் சான்றாக அமைகிறது. நல்லியக்கோடனின் கொடைச்சிறப்பு, விருந்தோம்பல் பற்றி,

"கூத்தரும் பாணரும் விறலியும் பொருநரும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிர் சொன்ன பக்கமும்"

- என ஆற்றுப்படை

இலக்கணத்திற்கு ஏற்றவாறும்,

"ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்
அளியும் என்றிவை ஆய்ந்து உரைத்தன்று"

- என பாடாண்திணையின் இலக்கணத்தைப் புறப்பொருள்வெண்பாமாலையும் இடம்பெற்றுப்பதை அறிகிறது. இந்நூலைப் பகுதி ஒன்பது கூறுகளாகப் பகுக்கலாம். அவை வருமாறு:

1. பாலை நில வருணனை
2. விறலியின் வழித் தோற்றம்
3. பாணனின் வறுமை நிலை
4. வேந்தர்களின் கொடைத்திறம்
5. கொடை வள்ளல்களின் சிறப்பு
6. பரிசில் பெற்று வந்த பாணனின் முந்தைய வறுமை நிலை
7. நல்லியக்கோடன் ஓய்மா நாட்டின் பெருமை பதிகளின் ஊர்களின் வளமும் பெருமைகளின் சிறப்புகளும்
8. நல்லியக்கோடனின் தலைநகரத்திற்கு வழி
9. நல்லியக்கோடனின் சிறப்புகள், கொடைத்திறம்.

புலவர் நோக்கம் :-

ஒரு நல்ல சிறப்பும் ஒரு கலைஞனைப் பார்த்துப் பாதிப்பினை ஏற்படுத்திக் கலைஞர் சிறப்பிக்க நோக்கமாக அமைவதும் உண்டு.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்"

- தேவாரம்

இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

-என்ற நாவுக்கரசர் பாடல் சிற்பத்தினால் உந்துதல் பெற்ற பாடலாகும் என்று டாக்டர். தமிழண்ணல் குறிப்பிடுகிறார்.

இலக்கியப் படைப்புக்களில் சிற்பங்கள் பற்றிய செய்திகள் இடம்பெறுவதும் தேவையான நோக்கமே ஆகும். திருமூலர்,

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை"

- என்று சிற்பக்கலையின் நுட்பங்களை எடுத்தாள்கிறார்.

மேலக்கூறுகளின் ஒருங்கிணைப்பு :-

ஒரு பாடலில் பல்வேறு கருத்துக்கள் இணைந்து ஒரு உணர்ச்சியினை வெளிப்படுத்துகின்றன. அந்த உணர்ச்சி வாசகன் மனத்திலும் சென்று தைக்கிறது. இவ்வாறு தைப்பதற்கு கருத்தலகுகள், உத்திகள், நடை முதலான மேலக்கூறுகள் சேர்க்கப்பட்டிருக்கும் முறை காரணமாக அமைகிறது. சான்று பாடல் வருமாறு :

"அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில்
எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்
இற்றைத்திங்கள் இவ்வெண் நிலவில்

. . . .

வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே"

- என்ற பாரி மகளிர் பாடல் மிகத்தீவிரமான அவல உணர்ச்சியைப் புலப்படுத்துகிறது.

புதுமைப்பித்தன் கூற்று :

புதுமைப்பித்தனின் 'சிற்பியின் நகரம்' என்ற கதையில் சிற்பத்திற்கு முன்னோர்களைத் தேவையில் ஒரு சிற்பி மேற்கொள்ளும் துன்பங்கள் கூறப்படுகின்றன. அப்பகுதி வருமாறு :

"இந்தப் பிரபஞ்சமே, பைலார்கில், நீ நினைப்பது போல் வெறும் பால்வெளியன்று : அர்த்தமற்ற பெய்க்குழப்பம் அன்று இடைது வயசிருக்கும் : அப்போது ஒருதரம் பாண்டிய நாட்டுக்குப் போயிருந்தேன். சிற்பத்தைப் பார்க்க வேண்டுமானால் கொல்லிப் பாவையைப் பார்க்க வேண்டும்."

இலக்கியமும் ஓவியமும் :-

இலக்கியத்தோடு பிற கலைகள் கொள்ளுகிற தொடர்பைவிட ஓவியக்கலை மிகுந்த தொடர்புடையதாக அமைகிறது. மூன்று செயல்பாடுகள் ஓவியக்கலையில் அமைகின்றன. அவை வருமாறு :

1. ஓவியத்திற்குரிய தரவுகளைத் திரட்டி தேவையானவற்றைத் தெரிவுசெய்தல்.
2. தேவையானவற்றைத் தெரிவுசெய்தல்.
3. தெரிவுசெய்தனவற்றுடன் கற்பனை, அழகியல், குறிப்புப்பொருள் ஆகியன கலந்து கலைப்படைப்பாக்குதல்.

## இலக்கியப் படைப்பாளியும் ஓவியனும் :-

இலக்கியப் படைப்பாளியும் ஓவியக் கலைஞனைப் போன்றே மூன்று நிலைகளைக் கையாளுகிறான். அவை வருமாறு:

1. இலக்கியப் படைப்புக்குரிய தரவுகளைத் தேடல்.
2. பொருத்தமானவற்றைத் தேர்வு செய்தல்.
3. தரவுகளைத் தகுந்த இடத்தில் கற்பனையுடன் இணைத்து நல் பொருண்மைகளை உணர்த்துதல்.

— கற்பனாவாதம்

## ஓவியத்தின் இலக்குகள் :-

ஓவியத்திற்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பை டாக்டர் தமிழண்ணல் மூன்று நிலைகளில் காட்டுகிறார். அவை வருமாறு:

1. இலக்கியம் தோன்றத் தூண்டுகோலாக இருக்கும் நிலை
2. ஓவியம் இலக்கியத்தின் பொருளாகும் நிலை.
3. இலக்கியம் ஓவியமாகவே அமையும் நிலை.

## ஓவியத்தில் இலக்கியத் தாக்கம் :-

கி.பி 11-ஆம் நூற்றாண்டில் தஞ்சையில் இராசராச சோழனால் கட்டப்பட்ட தஞ்சைப்பெரிய கோயிலில் சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாறு ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளது. கி.பி 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாறு பெரியபுராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இலக்கியமும் சடங்குகளும் :-

இலக்கியத்தைச் சடங்குகளுடன் ஒப்பிடலாம் என்று தனிநாயக அடிகளும் தெ.பொ.மீ அவர்களும் குறிப்பிடுவது எண்ணிப்பார்க்கத்தக்கது. இலக்கியத்தைச் சடங்குகளுடன் ஒப்பிடும் ஆராய்ச்சி முயற்சிகள் தமிழ் ஆய்வுகளில் இதுகாறும் காணப்படவில்லை. மயிலை சீனி வேங்கடசாமி இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்ற செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் காட்டுகிறார்

இலக்கியமும் பிறகலைகளும் :-

அமெரிக்க ஒப்பிலக்கிய அறிஞரான ஹென்றி ரெமாக் கூறிய வரையறைகளின் இரண்டாவது பகுதியின்படி இலக்கியத்தைப் பிற கலைகளுடன் ஒப்பிடுவது ஒப்பிலக்கியம்.

இலக்கியமும் தத்துவமும் :-

வாழ்க்கைப் பற்றிய உண்மையை இலக்கியமானது உணர்வு அடிப்படையில் கூறுகிறதென்றால், தத்துவம் அதனையே தர்க்கவியல் அடிப்படையில் கூறுகிறது. இரண்டிற்கும் அடிப்படைகளாம் மனிதவாழ்க்கைதான். இரண்டிற்கும் அடிப்படை ஒன்றாக இருப்பதால் அவை ஒப்பிலக்கிய ஆய்விற்கு உரியவையாகத் திகழ்கின்றன.

1. சமயத் தத்துவங்கள்
2. மெய்யியல் தத்துவங்கள்
3. மனித வாழ்க்கைப் பற்றிய பொதுத் தத்துவங்கள்

— என்ற மூன்றை இலக்கியத்துடன் ஒப்பிடுவது ஒப்பிலக்கிய வரம்புக்குட்பட்டது.

காந்தியத் தாக்கம் :-

உலகின் கவனத்தைத் தன்பால் ஈர்த்த காந்தியத் தத்துவம் தமிழ்நாவல், சிறுகதை, கவிதை போன்றவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தியதைப் பற்றிய ஆய்வுகள் பல தமிழில் நடைபெற்றுள்ளன. இவ்வாய்வுகள் ஒப்பிலக்கிய வரம்புக்குள் அடங்குகின்ற ஆய்வு முறைகளாகும்.

காந்தியத் தத்துவங்களால் ஈர்க்கப்பட்ட பல படைப்பாளிகளின் படைப்புக்கள் காந்தியத் தத்துவங்களின் பின்னணியில் ஆராயப்பட வேண்டியவை. காந்தியத் தத்துவத்தை மறுக்கும் முறையில் படைக்கப்பட்ட படைப்புக்களும் இவ்வகை ஆய்வுக்கு உரியனவாகும்.

சான்றாக, அஹிம்சையைப் பொறுத்தவரை காந்தியமும் பிற தத்துவங்களும் வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டுள்ளன.

மார்க்சியத் தாக்கம் :-

மார்க்சியத் தத்துவம் பெரிதும் அரசியல், பொருளாதாரக் கொள்கைகளாக உலகநாடுகளில் செயல் வடிவம் பெற்றாலும் இலக்கியத்திலும் அது பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சமூக விமர்சனப் பாங்கு படைப்பாளிகளுக்கிடையே தோன்றுவதற்கு மார்க்சியம் உதவிபுரிந்திருக்கிறது. இலக்கியவாதிகள் பலர் தங்கள் படைப்புகளில் மார்க்சியத்தை விமர்சனம் செய்யும் போக்கும் தமிழ் இலக்கிய உலகில் காணப்படுகிறது. இவை ஆய்வுக்கு உரியனவைகளாகும்.

சமயத் தத்துவத் தாக்கம்:-

தமிழ் இலக்கிய உலகில் ஒவ்வொரு காலகட்டத்திலும் பல்வேறு சமயத் தத்துவங்கள் இலக்கியத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதைக் காண முடிகிறது. மணிமேகலையில் புத்த சமயத் தத்துவங்கள் என்பது போன்ற ஆய்வுகள் இங்கு குறிப்பிடத்தக்கன. தமிழ் இலக்கிய மரபில் காணப்பட்ட அகப்பாடல் மரபின்மீது சைவத் தத்துவங்களின் தாக்கம் காரணமாகத் திருக்கோவையார் போன்ற நூல்கள் எழுந்தன. பக்தி இலக்கியங்களில் காணப்படுகின்ற நாயக, நாயகி பாவம் இவ்வகை தாக்கத்திற்கு தகுந்த சான்றாகும்.

இன்றைய "புத்திலக்கியங்களில்கூட மிக நுட்பமான முறையில் வேதாந்தச் சிந்தனைகள் இடம்பெற்றிருக்கின்றன. புதுமைப்பித்தனின் கயிற்றரவு-சிறுகதையில் அத்வைத வேதாந்தத்தின் சாயல்கள் படிந்திருப்பதை இப்பிலக்கிய ஆய்வின்வழி உணரமுடியும். புறக்கண்களால் காணப்படுவன அனைத்தும் உண்மையல்ல; உண்மையின் மாயத்தோற்றங்களேயாகும் என்ற அத்வைத சிந்தனையின் எதிர்மறைத் தாக்கம் புதுமைப்பித்தனின் 'கயிற்றரவு' சிறுகதையில் காணப்படுகிறது.

இலக்கியமும் பிற அறிவியல்களும் :-

இலக்கியம் பிறப் பயன்பாடு உடையது என்ற அடிப்படையில் அறிவியல், பொருளாதாரம், சமூகவியல், உளவியல் போன்ற துறைகளுடன் இலக்கியத்தை ஒப்பிடுவது ஒப்பிலக்கிய வரம்புக்குள் உட்படுகிறது.

அறிவியலும் இலக்கியமும் :-

உலகமெங்கணும் வாழ்ந்து வருகின்ற பல்வேறு அறிவியல் சிந்தனையாளர்களின் கொள்கைகளைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் அறிவியல் கொள்கைகளுடன் ஒப்பிட்டுக் காண்பது பயனுடைய ஆய்வாக அமைகிறது. சான்றாக, நீதிநூல் ஆசிரியரான திருவள்ளுவரை அறிவியல் சிந்தனையாளராகவும் இனங்காட்டுவதற்கு ஒப்பிலக்கிய ஆய்வு பயன்படுகிறது. திருக்குறளைக் கிரேக்க சிந்தனையாளர்களான அரிஸ்டாட்டில், பிளேட்டோ போன்றவர்களின் கருத்துகளோடு ஒப்பிடுவது அவசியமாகிறது.

இலக்கியமும் சமூகவியலும் :-

இலக்கியத்தைச் சமூகவியல் கொள்கைகளுடன் ஒப்பிட்டுக் காண்பது இன்றைய தமிழ் ஆய்வுலகில் ஒரு பாணியாகவே பின்பற்றப்பட்டு வருகிறது. டாக்டர் வை. சச்சிதானந்தன், "தற்காலத்திற்குச் சமூகவியல் இலக்கியத் திறனாய்வு இலக்கியத் திறனாய்வாளர்களிடம் இருந்து சமுதாயச் செயல்முறைகளின் உண்மைச் சான்றாக இலக்கியத்தைக் கொள்ள முயலுகின்றது

சமூகவியலாளர்கள் இலக்கியத்தை ஒதுக்கினர். ஆனால் இலக்கியத்தில் சமூகவியலின் முக்கியத்துவத்தை ஒப்பிலக்கிய அறிஞர்கள் உணர்ந்திருந்தபோதும் அதில் அவர்கள் அண்மைக் காலம்வரை கவனம் செலுத்தவில்லை" என்று குறிப்பிடுவதிலிருந்து சமூகவியல் கொள்கைகளை ஒப்பிலக்கியவாதி பயன்படுத்துவதற்கும் இலக்கியத் திறனாய்வாளன் பயன்படுத்துவதற்கும் வேறுபாடு இருக்கிறது.

சமூகவியலும் இலக்கியமும் :-

டாக்டர். கைலாசபதி, "சமூக விஞ்ஞானத்துறைகள் பலவற்றுள்ளும் இலக்கியத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையது சமூகவியலாகும். தனிமனிதனையும் மனித சமுதாயத்தையும் ஆராய்வதையே சமூகவியல் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது." என்று குறிப்பிடுவது இங்குச் சிந்திக்கத்தக்கது.

இக்கூற்று இலக்கியத்திற்கும் சமூகவியலுக்கும் உள்ள நெருக்கமான தொடர்பை வற்புறுத்துகிறது. ஒப்பிலக்கிய ஆய்வில் இலக்கியத்தையும் சமூகவியலையும் ஒப்பிடும் தன்மையினைக் காணலாம். இலக்கியம் சமுதாயத்தின் துணைவிளைவுகளில் ஒன்று என்ற அடிப்படையில்தான் இலக்கிய - சமூகவியல் ஒப்பாய்வு தொடங்குகிறது.

இலக்கியமும் உளவியலும் :-

இலக்கியத்தை உளவியலுடன் ஒப்பிட்டுக் காண்பது ஒப்பிலக்கியத்தின் ஒரு பெரும்பிரிவாக அமைகிறது. உளவியல் அணுகுமுறையில் உளவியல் கொள்கைகள் ஒரு கருவியாக மட்டுமே பயன்படுகின்றன. ஆனால் ஒப்பிலக்கியத்தில் இலக்கிய - உளவியல் ஒப்பாய்வில் உளவியலானது இலக்கியத்தைப் போலவே தனிப்பிரிவாகவே கருதப்படுகிறது.

தமிழ் நாவல்களில் அந்நியமாதல், தமிழ் நாவல்களில் பாலுணர்வு சிக்கல்கள் பற்றிய ஆய்வுகள், ஜெயகாந்தன் கதைகளில் உளவியல் சிக்கல்கள் போன்ற ஆய்வுகளும் முதலான சிக்கல்கள் பற்றிய உளவியல் கொள்கைகளைக் கருவிகளாகக் கொண்டு தமிழ் நாவல்களில் வரும் கதைமாந்தர்கள் பற்றி மேற்கொள்ளப்படும் ஆய்வுகளும் உளவியல் அணுகுமுறைக்குச் சான்றுகளாகின்றன.

உளவியல் கண்ணோட்டத்துடன் ஒரு கவிஞனின் மனநிலையை ஆராய்தல், குறிப்பிட்ட மனநிலைகளில் படைக்கப்படுகிற இலக்கியமும் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்படும்.

அசோகமித்திரனின் 'தலைமுறைகள்' குறுநாவலின் உளவியல் :-

உளவியலின் பல்வேறு நிலைகளுள் ஒன்று மனிதனின் வளர்ச்சிப் படிநிலைகளைப் பற்றிய உளவியல் ஆகும். இதில் ஒருவகை முதியோர் உளவியல் ஆகும். ஒரு மனிதன் மூப்பு அடைதல், மூப்பின் போது ஏற்படும் உடல், மனநிலை மாற்றங்கள் முதலியன ஆராயப்படுகின்றன.

முதியவர்கட்கு ஏற்படும் நடத்தை மாறுபாடுகள் 1. உடல் மாறுபாடு 2. உள்ள மாறுபாடு 3. இயக்க மாறுபாடுகள் ஆகிய மூன்று நிலைகளில் உளவியல் வல்லுநர்களால் விளக்கப்படுகின்றன. இவற்றுள் இலக்கியங்களில் முதியவர்களின் உள்ள மாறுபாடுகள்தான் மிகுதியான சித்தரிப்பினைப் பெற்றுள்ளன.

முதியோர் உளவியல் பற்றி உளவியலாளர் கூறியுள்ள கருத்துக்களின் பின்னணியில் அசோகமித்திரனின் 'தலைமுறைகள்' என்ற குறுநாவல் உளவியல் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது. 'தலைமுறைகள்' குறுநாவலில் சங்கரன் என்ற இளைஞன், அவன் தந்தை, தாய் ஆகியவர்கட்கு இடையே ஏற்படும் உறவுமோதல்கள், அதன் விளைவுகள் முதலியன விளக்கப்படுகின்றன.

## இலக்கியமும் அறிவியலும்!-

இலக்கியம் மனிதவாழ்க்கையின் பல கூறுகளோடு தொடர்பு கொண்டிருப்பதைப் போலவே அறிவியலும் மனித வாழ்க்கையின் பல கூறுகளோடு தொடர்பு கொண்டுள்ளது. சுஜாதாவின் 'வழிவங்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பு, 'சொர்க்கத்தீவு' நாவல், கி.பி 2000-க்கும் அப்பால் என்ற விஞ்ஞானக் கற்பனைப்படைப்பு முதலியனவும் மாலனின் 'தீர்வான்' என்ற கதையும் தொடர்கதைகளாக வெளிவந்து முடிந்துள்ள சுஜாதாவின் சில நாவல்களும் அறிவியலின் தாக்கம் பெற்றவை.

## இயற்பியலுடன் ஒப்பாய்வு:-

அறிவியலின் தாக்கம் பெற்ற நாவல், சிறுகதைகளை மதிப்பீடு செய்வதற்கு இயற்பியல் கோட்பாடுகளுள் ஒன்றான சார்பியல் கோட்பாட்டை பயன்படுத்தும் முயற்சிகள் சில தமிழில் நடைபெற்றுள்ளன. சார்பியல் கோட்பாட்டின் கருத்துக்களை ஒருபுறமும் நாவல்களின் நிகழ்ச்சி அலகுகள், பாத்திரங்களின் இயக்கம், கால அமைவு ஆகியவற்றை மறுபுறமும் வைத்துக்கொண்டு ஒப்பாய்வுகள் சில தமிழிலக்கிய உலகில் நடைபெற்றுள்ளன.